**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**D.V.O.P. 01/2023**

**Deposition of Witness ம.சா.1**

| | |
|---|---|
| **Name : ஜெயந்தி** | **Father/Husband's Name: சக்கரவர்த்தி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 24.01.2025**

**<u>முதல் விசாரணை</u>**

**சாட்சி ஆஜர். சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. நான் தற்சமயம் பழனியில் எனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். நான் தற்போது பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. நான் தாக்கல் செய்யும் 10 ஆவணங்களையும் மனுதாரராகிய எனது தரப்பில் குறியீடு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன். 07.06.2015 ம் தேதியிட்ட திருமண உறுதி வார்த்தை மடல் – அசல் ம.சா.ஆ.1, பாப்பம்பட்டி தங்கம் மஹாலை திருமணத்திற்கு முன்பதிவு செய்ததற்கான ரசீது அசல் ம.சா.ஆ.2 , 20.08.2015 ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.3 , திருமணத்தின் போது எடுத்த புகைப்படம் அசல் ம.சா.ஆ.4 (1 எண்ணிக்கை), 13.04.2022 ம் தேதியில் பழனி மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு உண்மை நகல் ம.சா.ஆ. 5,16.05.2022 ம் தேதி பழனி உட்கோட்ட காவல் துஜண கண்காணிப்பாளர் அனுப்பிய அழைப்பாணை அசல் ம.சா.ஆ. 6 , 02.06.2022 ம் தேதி ஆய்வாளர் பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும் தமிழக முதல்வர் மற்றும் மாநிலத் தலைவர் மனித உரிமைகள் ஆணையம், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு உண்மை நகல் ம.சா.ஆ. 7 , காவல் ஆய்வாளர் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தமிழக முதல்வர், தலைவர் தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் ஆகிய நான்கு நபர்களும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – 4 அசல் ம.சா.ஆ. 8, 05.06.2022 ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவுக்கு வழங்கப்பட்ட மனு**

ரீசுது எண். 134/2022 – அசல் **ம.சா.ஆ.9** , பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனக்கு 10.06.2022ம் தேதி அனுப்பிய அழைப்பாணை அசல் **ம.சா.ஆ. 10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. ( **ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.7 ஆகியவை நகல்களாக உள்ள நிலையில் ஆகியவற்றை குறியீடு செய்வதற்கு எதிர் மனுதாரர் தரப்பில் கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.)** மேற்படி பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு எனக்கு மனுப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக் கொள்கிறேன்.

<u>குறுக்குவிசாரணை</u>

**எதிர்மனுதாரர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2025.01.24 14:46:24 +0530

நீதித்துறை நடுவர்
பழனி